இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 172 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – தை 19 – சனிக்கிழமை 01 பிப்ரவரி 2025 – திருச்சி ★★ 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 172 : Thiruvalluvar Year - 2056 - Thai 19 - Saturday 01 February 2025 - Trichy ★★ 10 Pages ₹ 5.00


## 78-வது நினைவு நாள்: தீண்டாமை ஒழிப்பு உறுதி மொழி ஏற்பு!

# உத்தமர் காந்தியடிகள் சிலைக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் மரியாதை!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் - அமைச்சர் பெருமக்கள் பங்கேற்பு!



உத்தமர் காந்தியடிகள் அவர்களின் 78–வது நினைவு நாளையொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.1.2025) சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியகத்தில் அமைந்துள்ள உத்தமர் காந்தியடிகள் அவர்களின் திருவுருவச் சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, சட்டத்துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, பால்வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**சென்னை, பிப்.01-**

**உத்தமர் காந்தியடிகளின் 78 வது நினைவு நாளையொட்டி அவரது திருவுருவச்சிலைக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மரியாதை செலுத்தினார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.**

மதநல்லிணக்கத்தின் அடையாளமான அண்ணல் காந்தியடிகள் மதவெறியர்களால் கொல்லப்பட்ட 78வது நினைவு நாள் நேற்று முன்தினம் அனுசரிக்கப்பட்டது. சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியகத்தில் அமைந்துள்ள உத்தமர் காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மரியாதை செலுத்தினார். திருவுருவச்சிலையின் கீழே அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு முதலமைச்சர் அவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள் க.பொன்முடி, ரகுபதி, ராஜகண்ணப்பன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உள்ளிட்டோரும் அண்ணல் காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு மரியாதை செலுத்தினர்.

இதனையடுத்து சென்னை, தலைமைச் செயலகம், இராணுவ அணிவகுப்பு மைதானத்தில் தியாகிகள் தினத்தையொட்டி தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள், தலைமைச்செயலாளர் முருகானந்தம் மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளிட்டோர் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

“அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவோம் என்றும் இந்திய அரசியலமைப்பின்பால் இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன் ஆகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியலமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்” இவ்வாறு அனைவரும் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

---

### 16 மசோதாக்களை தாக்கல் செய்ய முடிவு!

## ஒன்றிய பட்ஜெட் கூட்டத்தொடர் தொடங்கியது!

### இன்று பட்ஜெட் தாக்கல்!

புதுடெல்லி, பிப்.1-

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் நேற்று குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு உரையுடன் தொடங்கியது. இன்று 2025-26 ஆம் ஆண்டுக்கான ஒன்றிய பட்ஜெட்டை நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்கிறார். பட்ஜெட் கூட்டத்தொடரையொட்டி, டெல்லியில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நேற்று முன்தினம் காலை நடைபெற்றது.

கூட்டத்தில் மக்களவை தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, மாநிலங்களவை தி.மு.க. குழுத் தலைவர் திருச்சி சிவா கலந்து கொண்டனர்.

காங்கிரஸ், சமாஜ்வாதி, திரிணாமூல் காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தின் போது, சர்ச்சைக்குரிய வக்பு சட்டத்திருத்த மசோதா உள்பட மொத்தம் 16 மசோதாக்களை பட்ஜெட் கூட்டத்தொடரில் தாக்கல் செய்யப்படும் என்று ஒன்றிய அரசு அறிவித்தது. இதனிடையே, வக்ஃபு சட்டத் திருத்த மசோதாவில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பான அறிக்கை மக்களவைத் தலைவர் ஓம் பிர்லாவிடம் நாடாளுமன்றக் கூட்டுக் குழு சமர்ப்பித்தது. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தரப்பில் முன்மொழியப்பட்ட 500க்கும் மேற்பட்ட பரிந்துரைகளை முழுமையாக நிராகரித்தது. இதற்கு எதிர்க் கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

---

### தமிழ்நாட்டில் தனிநபர் வருவாய் 171 சதவிகிதமாக உயர்வு!

## இந்திய அளவில் 2வது பெரிய பொருளாதார மாநிலம் தமிழ்நாடு!

### பொருளாதார ஆலோசனைக்குழுவின் அறிக்கையில் தகவல்!

புதுடெல்லி, பிப்.1-

2030ஆம் ஆண்டுக்குள் ஒரு லட்சம் கோடி டாலர் பொருளாதார மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்தும் இலக்கை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிர்ணயித்துள்ளார். அதன் அடிப்படையில், அரசுத் துறைகள் இயங்கி வருகின்றன. அந்த இலக்கை எட்டும் வகையில் தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை கொண்டு வருவதற்காக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

இந்நிலையில், பொருளாதாரத்தில் தமிழ்நாடு சாதித்த விவரங்களை பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக்குழுவின் அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

அதன்படி, இந்திய அளவில் 2வது பெரிய பொருளாதார மாநிலமாக தமிழ்நாடு வளர்ச்சி பெற்றுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியை எடுத்துக்கொண்டால், இந்தியாவில் தமிழ்நாட்டின் பங்கு 2023-24ம் ஆண்டில் 8.9 சதவீதமாக உயர்ந்துள்ளது. மேலும், இந்திய அளவில் தமிழ்நாட்டில் தனிநபர் வருவாய் 171.1 சதவீதமாக உயர்ந்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### உலகிலேயே முதல்முறையாக சென்னை மெட்ரோ ரயில்

## 2ஆம் கட்ட திட்டத்தில் - ஒரே தூணில் 5 தண்டவாளங்கள்!

### அதிகாரிகள் தகவல்!

சென்னை, பிப்.1-

உலகிலேயே முதல் முறையாக, சென்னையில் ஒரே தூணில் ஐந்து ரயில் தண்டவாளங்களுடன் மெட்ரோ ரயில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

சென்னையில் இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் பூந்தமல்லி புறவழிச் சாலையிலிருந்து வடபழனி வரை 15 கிலோமீட்டர் தொலைவுக்கு ரயில் பாதை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில், ஆற்காடு சாலைப் பகுதியில் சுரங்கப் பாதை மூலம் திட்டத்தை மேற்கொள்ள மெட்ரோ ரயில் நிர்வாகம் திட்டமிட்டது. இதற்கு 5 ஆயிரம் கோடி ரூபாய் கூடுதல் நிதி சுமை ஏற்படும் என்பதால், குறுகிய பாதையான வடபழனி முதல் போரூர் வரை உள்ள 4 கிலோமீட்டர் தொலைவுக்கு ஒரே தூணில் நான்கு ரயில்கள் வந்துசெல்லவும், ரயில்கள் இடமாற்றிக் கொள்ளவும் ஒரு லூப் லைனும் சேர்த்து 5 தண்டவாளங்கள் இரட்டை அடுக்குகளாக அமைக்கப்படுகின்றன.

மேலும், இதற்கான ரயில் நிலையங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த எடையைத் தாங்கும் வகையில், 75 மீட்டர் அளவுக்கு பூமியில் புதைக்கப்பட்டு தூண்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. வழித்தடம் 4 மற்றும் 5 ஆகிய இரண்டும் சந்திக்கும் இடமாகவும் இது அமைக்கப்படுகிறது. இதில் கீழே இரண்டு தண்டவாளங்கள் 4ஆவது வழித்தடத்திற்காகவும் மேலே 2 தண்டவாளங்கள் 5ஆவது வழித்தடத்திற்காகவும் அமைக்கப்படுகின்றன. இதில் மிக முக்கியமானது ஒரு மெட்ரோ ரயில் மேல் இன்னொரு மெட்ரோ ரயில் என்பது உலகத்திலேயே முதல்முறையாக ஆற்காடு சாலையில், 4 கிலோ மீட்டருக்கு 4 ரயில் நிலையங்கள் கொண்ட நீளமான பாதை அமைக்கப்படுவதாகவும், இது மிகப்பெரிய சவால் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

---

## ரவிக்கு எத்தனை நாக்குகள்?

21.1.2025 அன்று **‘பெண்களுக்குப் பாதுகாப்பான நகரம் சென்னை’** என்று சொன்னதும் ஆளுநர் ரவிதான்!

30.1.2025 அன்று **‘பாதுகாப்பற்ற சென்னை’** என்று சொல்வதும் இதே ரவிதான்!



**ஆள் ஒரே ஆள்தான். நாக்குதான் வேற!**